# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 6 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 2**
**FEBRUARY 2022 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பானவர்களே !

இம்முறையும் **மூன்றுமாத** ஜாமக்காரன் பத்திரிகைகளை ஒன்றாக அனுப்புகிறேன். 2022 **ஜனவரி, பெப்ருரி, மார்ச்** மாத ஜாமக்காரன் ஒன்றாக இணைக்கப் பட்டுள்ளது.

பயங்கர கிருமியான கொரோனாவுக்கு இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கவில்லை. முதல் அலை, இரண்டாம் அலை, மூன்றாம் அலை என்று அந்த கிருமிக்கு முடிவில்லாமல் நீண்ட தொடர்கதையாகிப் போனது. தடுப்பூசியும் சிறந்த பயன் தரப்படவில்லை. உலக விஞ்ஞானிகள் ஒன்று கூடி கொரோனாபற்றிய விவாதத்தில் முடிவு எட்டப்பட வில்லை. விஞ்ஞானிகள் கொரோனா விஷயத்தில் எங்கள் படிப்பு, ஞானம் யாவும் பிரயோஜனமற்று போனது.

***பிரபல விஞ்ஞானி கூறுகிறார் :*** முடிவாக ஆராய்ச்சி என்ன சொல்கிறது என்று கேட்டபோது அவர் சொன்னதாவது உலக மக்களுக்கு நான் கூற

விரும்புவது, **இனி நாம் யாவரும்** கொரோனவோடு வாழ பழகிக்கொள்ளவேண்டும். நீங்கள் வீட்டில் தனிமைப்படுத்தி குடும்பத்தையே பட்டினி கிடத்தியது போதும். அவரவர் வேலைக்கு போங்கள், அவரவர் தொழிலை செய்யுங்கள். கொரோனாவால் பாதிக்கப்பட்ட நீங்கள் கவலைப்படாமல் அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்கு சென்று மருந்து எடுத்துக்கொள்ளுங்கள்.

மரித்தால் இனி என்ன செய்யவேண்டும் என்று உங்கள் குடும்பத்தினரிடம், நெருங்கிய நண்பர்களிடம் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள். சாவு வந்தால் மரிக்க ஒப்புக்கொடுங்கள். இன்றைய உலகில் இன்றைய சூழ்நிலையில் இதுதான் என் ஆலோசனை. கொரோனா நம்மைவிட்டு நீங்காது. இனி கொரோனா வராது. ஆனால் பல பல பெயர்களில் கொரோனாவைவிட பயங்கர கிருமிகள் தாக்கும். ஆனால் எவ்வளவு வேகத்தில் கிருமி தாக்கியதோ அதே வேகத்தில் அது நீங்கிவிடும் எதையும் சந்திக்க போர்கால ஆயத்தத்தோடு இருங்கள் என்றார்.

வாசகர்களுக்கு நான் ஏற்கனவே அறிவித்தபடியே வாழ்க்கையில் **மேடு** பள்ளம் **ஏற்றம்** இறக்கம் எல்லாருக்கும் நிச்சயம் உண்டு. சோர்ந்து போக வேண்டாம். இயேசுவை உங்கள் இருதயத்தில் வரவழைத்துக்கொள்ளுங்கள். அது போதும். எந்த சூழ்நிலையிலும் கர்த்தருடைய பிள்ளையாக நீங்கள் வாழ்ந்து ஜெயிக்க முடியும்.

**- Dr. Pushparaj**

☐ வாசகர்கள் யாவரும் ஜாமக்காரன் ஊழியங்களுக்காக அனுப்பிய காணிக்கைகள் M.O., D.D., காசோலை NEFT, Online பணமாற்றம் செய்து நீங்கள் அனுப்பிய காணிக்கைகள் யாவும் மாதம் தாவறாமல் கிடைக்கிறது. யாவருக்கும் நன்றி கூறுகிறேன்.

☐ வாசகர்களின் குடும்பத்துக்காக தினசரியும் மாதம் இரண்டு முறையும் நான் செய்யும் உபவாச ஜெபங்களிலும் வசகர்களுக்காக ஜெபிக்கிறேன்.

# ஜென்ம சுபாவமும்...
# ...ஜென்ம பாவமும்

SELECTED

**ஜென்ம சுபாவம்** என்றால் **பிறவிக்குணம்** என்றும், **ஜென்ம** பாவம் என்றால் **பிறவிப்** பாவம் என்றும் நாமறிவோம். அப்படியானால், மனிதனுக்குள்ளே இருக்கிற **பிறவிக்குணம்** என்ன? **பிறவிப் பாவம்** என்ன? இப்படிப்பட்டதான **சுபாவமும்** பாவமும் இருப்பது நல்லது தானா? இது தீமையானது என்றால் இவைகளிலிருந்து விடுதலை உண்டா? இவை இரண்டும் ஒன்றோடொன்று இணைந்தவையா வேறு வேறா?

வேதத்தின் படி மனிதன் மூன்று வகையாய் பிரிக்கப்படுகிறான்.

**(1) இயற்கையான மனிதன்:**

அதாவது Natural மனிதன்: பாவ நிலையில் இருந்த ஆதாமிய மனிதன் (Adamicman) யோ.3:3,5ன் படி மறுபிறப்படையாத - மறுரூபமாகாத மனிதன் (யாக் 3:15; யூதா 19).

**(2) ஆவிக்குரிய மனிதன் :**

அதாவது Spiritualman: **மறுபிறப்படைந்தவன்.** தேவனோடு ஐக்கியம் கொண்டு, ஆவியானவர் தரும் வார்த்தைப்படி நடப்பவன் (எபே 5:18-20)

**(3) மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்டிருந்தும், மாம்சீகப் பிரகராமாய் நடப்பவன்:**

அதாவது நிரந்தரமான ஆவிக்குரிய வார்த்தைகளை நிதானிக்க முடியாமல் அழிந்து போகிற காரியங்களை, வார்த்தைகளை சிந்திக்கிறவன் (1 கொரி 3:1-4), **முதலாவது வகையான மனிதன்** இரண்டாவது வகையான மனிதன் **நல்லவனாய்** இருக்கலாம்; **நன்மை** செய்பவனாய் இருக்கலாம்; **சன்மார்க்க** ஜீவியம் செய்யலாம். ஆனால் **வேத வார்த்தைகள்** அவனுக்கு மறைந்திருக்கிறது. **மூன்றாவது** வகையான மனிதனோ **வேதத்தின் ஆழமான சத்தியங்களை** அறிந்து கொள்ள திராணியற்றவனாய் இருப்பான். இந்த **முதலாவது** வகையான மனிதன் தான் **ஜென்ம சுபாவம் - பிறவிக் குணம்** உடைய **ஆதாமிய மனிதன்.** ஏன் ஆதாமிய மனிதன் என்று சொல்கின்றோம்?

ஏதேனிலே உண்டாக்கப்பட்ட ஆதாமுக்கு தேவன், ஆதி 2:17ல் சொல்லப்பட்ட வார்த்தை மறைக்கப்பட்டிருந்தது. அவன் பிசாசு சொன்னதை தான் நம்பினான்; தேவ வார்த்தையை மறந்தான்; மட்டுமல்ல மறுதலித்து செயல்பட்டான். பிசாசின் வார்த்தைக்குக் கீழ்படிந்தான். முடிவோ சாபமும் தண்டனையும். இது பிறவியிலேயே ஆதாமுக்கு இருந்த ஜென்ம சுபாவம்,

**ஒவ்வொரு மனிதனுக்கும் தேவன் சுயாதீனத்தைக் கொடுத்திருந்தார்** (யாக் 1:25; 2:12). நம் தேவன் **சர்வாதிகாரி** அல்ல. மனிதன் தன் ஜென்ம சுபாவத்தின்படி **அவனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு : அதன் முடிவோ மரண வழிகள்** (நீதி 14:12). மனிதனின் ஜென்ம சுபாவப்படி நடக்கும் செயல்பாடுகள் எல்லாமே செம்மையாய் இருக்காது. மனிதன் குறைவுள்ளவன். தான் நினைத்ததை செய்யும் பல காரியங்களில் தீமை சம்பவிப்பது சர்வசாதாரணமாகிறது. **மோசே** தனக்கு தெரிந்தபடி **எகிப்தியனை கொன்றான்.** முடிவோ **பயந்து ஓட வேண்டிய நிலை வந்தது ரெபேக்காள்,** யாக்கோபுக்கு ஆசிர்வாதம் கிடைக்க **தனக்கு விருப்பமானபடி செய்தாள்.** முடிவோ... அண்ணன் தம்பி தகராறு: ஆடு மேய்க்கும் வேலை. இப்படி ஏராளம் சொல்லலாம், இதனால் தான் **சுயாதீனத்தை** - ஜென்ம சுபாவமாய் கொடுத்த தேவன், மனிதனுக்கு **வழிகாட்டியாய், விளக்காய் வேதத்தைக் கொடுத்து** (நீதி 6:23) விசுவாச ஓட்டத்தை நடத்துகிறார். (ரோ 10:14 : எபி 12:2) **விசுவாச ஓட்டத்தில் காலடி வைத்தாலே,** ஜென்ம சுபாவத்தை நாம் சாராமல் தேவனை- தேவ வார்த்தையை சார்ந்து நடப்போம், முடிவோ சந்தோசமும் சமாதானமும். இந்த நிலை தான் **இரட்சிப்பின் நிலை.** இந்த நிலைக்கு வந்தாலே நம் ஆவி. தேவ ஆவி சொல்லுகிறதைக் கேட்டு, நமது உலக சிந்தனையாகிய - மனமாகிய - ஆத்மாவுக்கு கட்டளை கொடுக்கும் (சங் 103:1-3). அதன்படி சரீரம் நன்மையை செய்யும். இப்படி ஆதாமின் ஆவி செயல்படாமல், தன் ஜென்ம சுபாவத்தில் நடந்து. ( அப்படி நடக்க வைப்பவனே சாத்தான்) பாவம் செய்தான் அதுதான் **ஜென்ம சுபாவத்தில் செய்த ஜென்ம** பாவம், (விலக்கப்பட்ட கனியை விசுவாசமில்லாமல் பிசாசின் சொற்படி புசித்தான்)

இந்த ஆதாமின் ஜென்ம சுபாவத்தால் வந்த ஜென்ம பாவத்தால் சாபமும் வந்தது : தண்டனையும் வந்தது. சாபம் ஆதாமே தேடிக் கொண்டது (உபா 11:26 -28, 30:15,19). **இந்த ஜென்ம சுபாவம்தான் தலைமுறை** தலைமுறையாய், **மனுக்குலத்தை** தொடர்ந்து வருகிறது.அதனாலே ஒன்றான மெய்த் தேவனையும், அவர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்காமல் (யோ 17:3) ஜென்ம சுபாவப்படியே பிசாசின் ஆளுகையில் இருந்து மனிதன் கொல்லப்படுகிறான்: அழிக்கப் படுகிறான்: திருடப்படுகிறான் (யோ 10:10)

இந்த **ஜென்ம சுபாவம்** எப்போது மாறும்? கர்த்தாரகிய இயேசுவை-இயேசுவாகிய வார்த்தையை, ஆவியாகிய இருதயத்தில் விசுவாசித்து அறிக்கை இடும்போது தான். (பழைய ஏற்பாட்டில் வரப்போகும் மேசியாவை விசுவாசிப்பது). ஜென்ம சுபாவம் மாறி **தேவ சுபாவம்** - திவ்விய சுபாவம் வருகிறது (2 பேது 1:4). **தேவ சுபாவத்தை** ஆவியாகிய இருதயத்தில்பெற்றவன் ஒருக்காலும் அந்நிய தெய்வத்தை தொழவோ, அதன்படி செய்யவோ போகவே மாட்டான். இது சத்தியம். மனுஷ சாபத்தால் - **மிருகம், பறவை, ஊரும் பிராணி,** நீர் வாழும் ஜந்து ஆகிய அனைத்து சுபாவங்களையும் அடக்க முடியும். (யாக் 3:7) ஆனால்

இந்த ஜென்ம சுபாவம் தனித்து செயல்படும் போது, அது தேவஞானமின்றி, லௌகீகம், அது கலந்து பேய்த்தனத்திற்கு உரியதாயிருக்கும் (யாக் 3:15: யூதா 19) தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளாது (1 கொரி 2:14) அது அவர்களுக்கு பைத்தியமாய்த் தோன்றும். ஆதாமின் சந்ததியான அத்தனை பேருக்கும் இந்த ஜென்ம சுபாவம் உண்டு. **குழந்தையாயிருக்கும் போது இந்த சுபாவத்தின் தாக்கம் குழந்தைக்கு தெரியாது** குழந்தை வளர்ந்து வளர்ந்து, அறியாப் பிள்ளை என்ற நிலையிலிருந்து **அறிகின்ற சிந்திக்கின்ற நிலை** வரும்போதுதான் அது தெரியும். அது தான் Age of accountability. இது அவரவரின் உடல் மனக் கூற்றுப்படி வயது வித்தியாசப்படும். **குழந்தைக்கும், பைத்தியக்காரனுக்கும்** இந்த புரிகின்ற நிலை இல்லை. இப்படிப்பட்ட அறியாத காலத்தில் இருப்பதையும் (இருப்பவர்களையும்) தேவன் **நியாயத்தீர்ப்புக்கென்று கண்டு கொள்வதில்லை** (அப் 17:30). எனவே குழந்தைகளுக்கு ஆதாமின் ஜென்ம சுபாவம் இருப்பதால் நியாயத் தீர்ப்பு பற்றியோ, பாதாளம் - நரகம் பற்றியோ கவலைப்படத் தேவையில்லை. எல்லாக் குழந்தைகளும் அறியாப் பிள்ளைகள். அந்த பிள்ளைகளைப்போல நாம் மாற வேண்டும் என்று விரும்புகிறவர் நம் தேவனல்லவா அப்படிப்பட்ட சிறு பிள்ளைகளை நேசிப்பவர் அவரல்லவா(மத் 18) சிறு பிள்ளைகள் **இந்துவோ** கிறிஸ்துவோ **முஸ்லீமோ** யாராயிருந்தாலும் தேவனால் நேசிக்கப்படுபவர்கள். அவர்கள் ஜென்ம சுபாவமறியாத அறியாப்பிள்ளைகள். அவர்களுக்கு **பாதாளம், நரகம்** என்ற **ஆக்கினைத் தீர்ப்பே இல்லை.**

ஆதாமுக்குள்ளான ஜென்ம சுபாவம் தொடர்வது போல, அவன் தன் சுபாவத்தினால் தேவனின் வார்த்தையை தள்ளிவிட்டு பிசாசின் சுபாவத்திற்கு இணைந்து செயல்பட்டதால் வந்த பாவமும் அந்த பாவத்திற்குரிய தண்டனையும் மனித குலத்தை தொடர்ந்து வருகிறது (ரோ 5:12). இந்த பாவம் தான் **ஜென்ம பாவம்:** அதனால் **சாத்தானுக்கும், ஏவாளுக்கும் ஆதாமுக்கும் தண்டனைகள் கொடுக்கப்பட்டன** (ஆதி 3:14-19). இவைகள் சாபமல்ல : சாபமாயிருந்தால் இயேசுவின் சிலுவை மரணத்தோடு விசுவாசிப்பவர்களுக்கு அது ஒழிந்திருக்குமே (கலா 3:13). இந்த **தண்டனையின் உச்ச கட்டம் தான்** உலகிலே **சரீர மரணம்.** ஒருவனாலே பாவம் பிரவேசித்து அதற்கான தண்டனையும் வந்தது போல, கிறிஸ்து என்னும் ஒருவராலே பாவமும் நீக்கப்பட்டு பிசாசால் வந்த ஆவிக்குரிய மரண தண்டனையும் மாறியது (ரோ 5:15-18).

இதை விசுவாசித்து இரட்சிப்புக்குள் வருபவனுக்கு பிசாசால் வரும் **மரண பயமே இல்லை** (எபி 2:14). மேலும் ஆதி 3:19ல் தேவன் தந்த மரணத் தண்டனையை ஏதேனிலே, கொடுத்தவர் தான் மாற்ற முடியும் (முதலில் அவர் மனிதனாய் வந்து பிசாசின் மரணத்தை தான் ஜெயித்தார்) அவரை விசுவாசிக்கும் நமக்கு அவரின் இரகசிய வருகையிலே அவர் தந்த

மரணத்தை மாற்றுவார் (1 கொரி 15:51-57). மற்றவர்களுக்கோ 1 கொரி 15:26: வெளி 20:14ன் படி வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்போடு மாறும். இந்த மரண தண்டனையைக் கொடுத்தவரே மாற்றும் வரை. ஆதாமின் ஜென்ம பாவமும் அதனால் ஏற்பட்ட பிசாசின் அகால மரணத் தண்டனையும் கருவிலிருக்கும் குழந்தை முதற்கொண்டு அனைவருக்கும் உண்டு. மேலும் இந்த ஜென்ம பாவமுள்ள மனுஷன், அறிகின்ற நிலை வந்த பின்னும்ஜென்ம சுபாவத்தோடு தொடர்ந்து வாழ்ந்தால் தன்னுடைய கிரியைகளினாலே பாவம் செய்கிறான். ஆக Ageof accountability வந்த பின்னும் ஜென்ம சுபாவமுள்ளவனுக்கு (தேவ திவ்விய சுபாவம் இல்லாதவனுக்கு, இரட்சிக்கப்படாதவனுக்கு) ஆதாமின் ஜென்ம பாவமும் தான் செய்த கர்மப் பாவமும் (சரீரக் கிரியைப் பாவமும்) பிடித்துக் கொள்கின்றது. அப்படிப் பாவத்திற்கு தண்டனை பிசாசின் மூலம் வரும் மரணம்: கர்மப் பாவத்திற்கு தண்டனை நித்திய மரணம்: 2ம் மரணம் : நரகம் ஆக்கினைத் தீர்ப்பு (வெளி 22:12 :ரோ 8:1). **இரண்டிலிருந்தும் விடுதலையாக** ஒரே வழி **இரட்சிக்கப்படுதல்** (ரோ 24:13, மாற் 16:16).

ஒரு காரியம் பாவம் செய்தாலும், செய்யவிட்டாலும், இரட்சிக்கப்பட்டாலும், படாவிட்டாலும், ஆதி 3:19 ல் அவர் தந்த **மரண தண்டனை எல்லாருக்கும் உண்டு.** (சங் 91:16)

இதை வாசிக்கும் தேவப்பிள்ளையே குழந்தைகளிடமுள்ள ஆதாமின் ஜென்ம சுபாவம் இருப்பதை அறிந்து ஒப்புக் கொடுக்கும்போது தான் தேவகிருபையின்படி மாறுமே ஒழிய (எபே 2:8, 2 பேது 1) **ஞானத்தாய், ஞானத்தந்தையாலோ, குழந்தை ஞானஸ்நானத்தாலோ மாறாது.** ஒருவனுடைய சுபாவத்தை தேவனின்றி வேறு எந்த ஒரு மூன்றாவது ஆளாலும் முழுமையாய் மாற்ற முடியாது . அப்படியே மாற்றும் போது சம்பந்தப்பட்ட மனுஷனும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். பால் மனம் மாறா பச்சிளம் குழந்தை அப்படிச் செய்வதை ஏற்றுக் கொள்கிறதா? தேவனும் அப்படிச் செய்யச் சொல்லி வேதத்தில் சொல்லியிருக்கிறாரா? சிந்தியுங்கள். மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று தான் ஞானஸ்நானம் (அப் 2:38) விசுவாசமுள்ளவனாகித்தான் ஞானஸ்நானம் (மாற் 16:16). இதுவே தேவனின் மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் அடையாளம். இஃதெல்லாம் குழந்தை ஞானஸ்நானம் கொடுத்து தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்வதெல்லாம், தேவனுக்கு விரோதமானது : ஜென்ம சுபாவமுள்ளது (1 கொரி 2:14) . மேலும் ஆதாமின் ஜென்ம பாவத்தினால் வந்த ஆவிக்குரிய மரணத்தை (ஆதி 2:17) ஒருவர் அறியாத நிலைவில் இருக்கும் வரைக்கும் அதை தேவன் அறியாதவராகவே செயல்படுவார் (அப் 17:30). அது குறித்து கவலைப் படத் தேவையில்லை. தேவன் தந்த சரீர மரண தண்டனைப்படி (எபி 9:27) எல்லோரும் மரித்தே ஆக வேண்டும். அதிலிருந்து **குழந்தை ஞானஸ்நானமானது குழந்தைகளையும் தப்புவிக்காது.** சரீர மரணத்திற்குப் பின்னே 2ம் மரணம் இருக்கிறதே **அது தான் நரகம்.** இது ஜென்ம சுபாவமுள்ள, ஜென்ம பாவத்தை புரியாத குழந்தைகளுக்கு அல்லவே அல்ல. ஜென்ம சுபாவமுள்ளவர்களும், ஜென்ம பாவத்திலிருந்து விடுதலையாகி தன் கர்மப் பாவத்தில் நிலைத்திருப்போரும் போக வேண்டிய இடம் தான் அது.

# தடுப்பு ஊசி :
# அவிசுவாசத்தின் அடையாளமா ?

நன்றி : சத்திய வசனம், இலங்கை

Dr. M.S. Vasantha Kumar

**ஜாமக்காரன் குறிப்பு :**

கொரோனா **தடுப்பூசி** போடலாமா? வேண்டாமா? உடலுக்கு **பின்விளைவு** ஏற்படுமா? என்ற சந்தேகக் கேள்விகளோடு விசுவாசிகளாக உள்ளவர்கள் இது அந்திகிறிஸ்து வேலையா? வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்படும் **666 என்ற பிசாசின்** நெம்பருக்கு இது **சம்பந்தப்பட்தா**? என்ற சரமாரியான கேள்விகளுக்கு கீழ்காணும் கட்டுரை பதில் தரும் என்று நம்புகிறேன்.

**அவிசுவாசத்தின்** அடையாளமாக **கொரோனா தடுப்பு ஊசிகளை** சிலர் கருதுகின்றனர். இது **அந்தி கிறிஸ்துவின் அடையாளம்** அல்ல என்பதை அறிந்துள்ள கிறிஸ்துவர்களிலும் பலர் **தடுமாற்றத்துடனேயே** இருக்கின்றனர். அதாவது நமது தேவனே நம்முடைய **பரம வைத்தியராக** இருப்பதினால், **மருந்துகள்** அல்ல, **தேவனே சுகம் கொடுப்பார்** என்பதினால், கொரோனா தொற்றுவதைத் **தடுப்பதற்கு ஊசிகள் போடுவது** அவிசுவாசத்தின் **அடையாளமாக இருப்பதாக** இவர்கள் கருதுகின்றனர். மேலும் **கொரோனாவுக்கு** மாத்திரமல்ல, எந்த ஒரு வியாதிக்கும் மருந்துகள் எடுப்பதையும் மருத்துவரின் உதவியை நாடுவதையும் இவர்கள் **அவிசுவாசத்தின் அறிகுறியாகவே** பார்க்கின்றனர். ஆனாலும் இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எல்லா விதமான **தடுப்பு ஊசிகளையும் போட்டுள்ளனர்.** மேலும் தங்களுக்குப் **பார்வைக் குறைவு** ஏற்பட்டால் **மூக்குக் கண்ணாடிகளுடன்** காணப்படுகின்றனர். இதனால் தேவன் நமக்கு எவ்வாறு சுகம் கொடுக்கிறார் என்பதையும் **தடுப்பு ஊசிகள்** போடுவது அல்லது **மருந்துகள் எடுப்பது அவிசுவாசத்தின் அடையாளமா?** என்பதையும் வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாயுள்ளது.

தேவனே நம்முடைய பரிகாரியாக (வைத்தியராக) இருந்து நமக்கு சுகம் கொடுக்கின்றபோதிலும் (யாத் 15:26) மனிதர்களுக்கு அவர் சுகம் கொடுக்கும் முறைகள் வித்தியாசமாக இருப்பதை வேதாகமம் அறியத்தருகின்றது. ஏனெனில் **தேவன்** சில நேரங்களில் **படிப்படியாக சுகம் கொடுப்பவராகவும்** இருக்கின்றார். இயேசு கிறிஸ்துவும்

இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் **உடனடியாகவும் முழுமையாகவும்** வியாதியஸ்தரை சுகப்படுத்தியபோதிலும் சில நேரங்களில் **படிப்படியாகவே சுகம் கொடுக்கிறவராக** இருந்தார்.

இதனால்தான் **பெத்சாயிதா** என்ற பட்டணத்தில் **ஒரு குருடனை** இயேசு கிறிஸ்து சுகப்படுத்திய போது, குருடனுடைய கையைப் பிடித்து அவனைக்கிராமத்துக்கு வெளியே அழைத்துக்கொண்டு போய், **அவன் கண்களில் உமிழ்ந்து,** அவன்மேல் கைகளை வைத்து: **எதையாகிலும் காண்கிறாயா** என்று கேட்டார். அவன் ஏறிட்டுப் பார்த்து : நடக்கிற மனுஷரை **மரங்களைப்போலக்** காண்கிறேன் என்றான். பின்பு அவர் மறுபடியும் அவன் கண்களின்மேல் **கைகளை வைத்து** அவனை ஏறிட்டுப் பார்க்கும்படி செய்தார். அப்பொழுது அவன் சொஸ்தமடைந்த, யாவரையும் தெளிவாய்க் கண்டான் (மாற்கு 8:22-25).

இச்சம்பவத்தில் இயேசு கிறிஸ்து உடனடியாக முழுமையான சுகத்தைக் கொடுக்காமல் **இரண்டு கட்டங்களில்** சுகத்தைக் கொடுக்கின்றார். இதனால்தான், அக்குருடன் சுகம் பெற்றவுடன் ஆரம்பத்தில் **தெளிவற்ற நிலையில்** மனிதரை **மரங்களைப்போல** பாரா்க்கிறவனாக இருந்தான். ஆனால் **பின்பு தெளிவாகப் பார்க்கக்கூடியவனானான்.**

இதைப்போலவே தற்காலத்திலும் சில நேரங்களில் தேவன் வியாதியஸ்தரைப் படிப்படியாக சுகப்படுத்துபவராக இருக்கின்றார். தேவன் **தம்முடைய நேரம் வரும்வரை** காத்திருந்து சுகப்படுத்துபவராகவும் இருக்கின்றனர். இதனால் தான், பிறவியிலிருந்தே சப்பாணியாய் இருந்த ஒருவன் அன்றாடம் ஆலயத்தின் அலங்கார வாசலில் பிச்சைக் கேட்டுக்கொண்டிருந்தாலும் (அப் 3:2), பல தடவைகள் அவ்வாசலைக் கடந்து சென்ற இயேசு கிறிஸ்து அவனை சுகப்படுத்தாமல் **பிற்காலத்தில்** தமது **சீடர்கள் மூலம் அவனை சுகப்படுத்தினார் (அப் 3:3-8).**

தேவன் **உடனடியாகவும் படிப்படியாகவும்** தம்முடைய **நேரம் வரும்** வரை காத்திருந்தது மாத்திரமல்ல **மருந்துகள் மூலமாகவும்** சுகம் கொடுக்கிறவராகவும் இருக்கிறார். இதனால் தேவன் நமக்கு சுகத்தைக் கொடுப்பதும் நாம் மருந்துகள் எடுப்பதும் ஒன்றுக்கொன்று முரணான செயல்கள் அல்ல,

ஏனெனில் சில நேரங்களில் **நேரடியாக நமக்கு சுகத்தைக் கொடுக்கும் தேவன்** பெரும்பாலான சந்தர்ப்பங்களில் **மருந்துகள்** மூலமாகவே நமக்கு சுகத்தைக் கொடுக்கின்றார். இதனால்தான், மரிக்கும் நிலையிலிருந்த **எசேக்கியாவுக்கு** பதினைந்து வருஷங்களைக் **கூட்டிக்கொடுத்த தேவன்** அவனது சரீரத்திலிருந்த வியாதி சுகமடைவதற்கு அக்காலத்தில் மருந்தாக உபயோகிக்கப்பட்ட **அத்திப்பழ அடையை** உபயோகிக்கும்படி அறிவுறுத்தினார் (2ராஜா 20:1-7). அதாவது **எசேக்கியா சுகமடைவான்** என்னும் தேவ செய்தியை அறிவித்த

**ஏசாயா, அத்திப்பழ**த்து அடையைக்கொண்டு வாருங்கள் என்றான். அதை அவர்கள் கொணடுவந்த **பிளவையின்மேல் பற்றுப்போட்டபோது** அவன் பிழைத்தான் (2 ராஜா 20:7, ஏசா. 38:21). ஏனெனில் **அத்திப்பழ அடை** அக்காலத்தில் ஒரு மருந்தாகவே இருந்தது. உண்மையில் **இது மிகப்பழங்கால மருந்தாகும்.** எனவே தேவனே எசேக்கியாவுக்கு சுகத்தைக் கொடுத்தபோதிலும் (2 ராஜா 20:5), அவர் இதை **மருந்தின் மூலமே** கொடுத்துள்ளார், (2ராஜா20:7).

ஏனெனில் தேவன் **மருந்துகளின் மூலமும்** தம்மை விசுவாசிப்பவர்களுக்கு சுகம் கொடுக்கிறவராய் இருக்கின்றார். மேலும் வேதாகம காலத்தில் **அத்திப்பழ அடை** மாத்திரமல்ல **கீலேயாத்** மலையில் **வளரும் மரங்களிலிருந்து** தயாரிக்கப்படும் **தைலமும்** மிகவும் **பிரபலமான மருந்தாக** இருந்தது (எரேமியா 8:22).

பழைய ஏற்பாட்டில் தேவனே மக்களை சுகப்படுத்துகிறவராக இருந்தாலும் அவர் அருளும் சுகம் மருந்துகளின் உடயோகத்தையும் உள்ளடக்கியதாயிருந்தது. இதனால் தான் எசேக்கியாவுக்கு சுகம் கொடுப்பதற்கு அத்திப்பழ அடையை உபயோகிக்கும்படி அறிவுறுத்திய தேவன் **இருவருக்கும் இடையில் ஏற்படும் சண்டையில்** ஒருவனுக்கு **காயம்** ஏற்பட்டால், **காயப்பட்டவனுக்கு நஷ்ட ஈட்டையும் காயத்தை மருத்துவர் மூலம்** குணப்படுத்துவதற்கான செலவையும் காயத்தை ஏற்படுத்தியவன் **கொடுக்க வேண்டும்** என்று கட்டளையிட்டுள்ளார். (யாத்.21:18-19).

எனினும் இக்கட்டளையில் அவனை **நன்றாய்க் குணமாக்குவிக்ககடவன்** என்னும் சொற்பிரயோகம், அவனை சுகப்படுத்துவதற்கு அவசியமான காரியங்களை செய்யும்படியான அறிவுறுத்தலாக, அதாவது அவனுக்கு ஏற்படும் மருத்துவ செலவைக் கொடுக்கும்படியான கட்டளையாகவே உள்ளது. மேலும் அக்காலத்தில் காயங்களுக்கு மருந்துகள் போட்டு சுகப்படுத்துவேன் என்று தேவன் கூறாமல் காயத்தை ஏற்படுத்தியவனிடம் அவனைக் குணப்படுத்தும்படி கட்டளையிட்டுள்ளார். மேலும் தேவனே இவ்வாறு கூறுவதினால் அவர் **அக்காலத்தில் நடைமுறையில் இருந்த மருத்துவ சிகிச்சைகளை** அங்கீகரித்தவராகவே அதன்மூலம் காயத்தைச் சுகப்படுத்தும்படி அறிவுறுத்தியுள்ளார்.

இதைப் போலவே ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் இஸ்ரவேல் மக்களோடு பேசும்போது அவர்களுடைய **காயம் சீழ் பிதுக்கப்படாமலும் கட்டப்படாமலும் எண்ணெயினால்** தடவாமலும் இருக்கிறது என்று தெரிவித்துள்ளார் (ஏசாயா 1:6). உண்மையில் இது இஸ்ரவேலைப்பற்றிய விவரணமாய் இருந்தாலும் இதுவே அக்காலத்தில் காயங்கள் ஆற்றப்படும் முறையாக இருந்தது. மேலும் தேவன் இதை எதிர்பார்ப்பவராக அல்ல. இவ்விதமாகவேச காயம் ஆற்றப்படவேண்டும் என்பதை அறிவுறுத்தபவராகப் பேசியுள்ளார்.

அதாவது **இஸ்ரவேல்** எவ்வித மருத்துவ சிகிச்சையும் இல்லாமல் **கொடிய புண்களுடன் இருப்பதாக தேவன் தெரிவித்துள்ளார்.** எனவே நாம் மருந்துகள் உபயோகிப்பதற்கும் மருத்துவ சிகிச்சைகள் செய்வதற்கும் தேவன் எதிரானவர் என்று கூறமுடியாது.

தேவன் மருந்து மூலமும் சுகம் கொடுக்கிறவராய் இருப்பதினால் தான் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்போது அக்கால மருத்துவ சிகிச்சை முறைகளையும் செய்துள்ளதை வேதாகமம் அறியத்தருகின்றது.

உதாரணத்திற்கு மரித்துப்போன பிள்ளையை உயிர்ப்பித்த எலிசா ஆரம்பத்தில் **தன்னிடத்தில் இருக்கும் தேவ வல்லமையை** அடையாளப்படுத்தும் விதத்தில் தன்னுடைய **கோலை அப்பிள்ளையின் மீது வைத்தார்.** ஆனால் இதில் எவ்வித பலனும் கிடைக்கவில்லை (2 ராஜா 4:29-32). இதனால் அவர் **கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்து** கிட்டேபோய் தன்வாய் **பிள்ளையின்வாயின் மேலும்** தன் கண்கள் **அவன் கண்களின் மேலும்** தன் **உள்ளங்கைகள்** அவன் **உள்ளங்கைகளின்** மேலும் படும்படியாக அவன்மேல் **குப்புறப்படுத்துக்கொண்டான்.** அப்பொழுது **பிள்ளையின் உடல் அனல்கொண்டது.** அவன் எழுந்து, அறை வீட்டில் இங்கும் அங்கும் உலாவி திரும்பக்கிட்டப்போய் அவன்மேல் **குப்புறப்படுத்தான்.** அப்பொழுது அந்தப் பிள்ளை **ஏழுதரம் தும்மித் தன்** கண்களைத் திறந்தான்.(2 ராஜா 4:32-35).

இச்சம்பவத்தில் மரித்துப்போன பிள்ளையின்மீது எலிசா படுத்துக்கொண்டு செய்தவைகள், அக்காலத்தில் **இருதயம் நின்றுபோனவர்களுக்கு** அதை **மறுபடியும் இயங்கவைப்பதற்காகச்** செய்யும் மருத்துவ சிகிச்சை முறையாகும். பிள்ளை உயிர்பெறுவதற்காக எலிசா ஜெபித்தபோதிலும், **அவர் ஜெபத்தோடு** அக்கால மருத்துவ **சிகிச்சையையும் செய்துள்ளார்.** இதனால்தான் எலிசா அவன் மேல் குப்புறப்படுத்தான். அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான் என்று வேதாகமம் கூறுகிறது (2 ராஜா 4:35). இதைபோலவே **எலியா தீர்க்கதரிசியும்** ஒரு பிள்ளையை உயிர்ப்பித்தார் (1 ராஜா 17:17-24).

எலியா பிள்ளையின் உயிர் அவனுக்குள் திரும்பிவரும்படி ஜெபித்தது உண்மை என்றாலும் அவர் அந்தப் பிள்ளையின்மேல் மூன்றுதரம் குப்புறவிழுந்த செயல் முறை அக்கால மருத்துவ சிகிச்சையாகவே உள்ளது. அப்போஸ்தலனாகிய பவுலும் இத்தகைய சிகிச்சையின் மூலம் ஒருவனை சுகப்படுத்தியுள்ளார். இதனால்தான் **அவர் செத்தவன் மீது விழுந்த அவனை அணைத்துக்கொண்டு அவன் உயிருடன் இருப்பதாகத் தெரிவித்தார்** (அப் 20:9-10). எனவே ஜெபமும் மருத்துவ சிகிச்சையும் இணைந்து செயல்படுவதும் தேவன்

மனிதர்களைச் சுகப்படுத்தும் வழிமுறைகளில் ஒன்றாக இருப்பதை வேதகாமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் அறியத்தருகின்றன.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக என்று அறிவுறுத்தும் வேதாகமம், அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள் என்று கூறுகிறது (யாக் 5:14). இவ்வசனத்தில் **எண்ணெய் பூசும் செயல்முறை** மருத்துவ ரீதியான சிகிச்சையாகவே உள்ளது. ஏனெனில் அக்காலத்தில் உபயோகிக்கப்பட்ட ஒ**லிவ எண்ணெய் பலதரப்பட்ட வியாதிகளுக்கான** மருந்தாக இருந்தது. இதனால்தான் **நல்ல சமாரியனைப்பற்றிய** உவமையில் **காயப்பட்டுக் கிடந்தவனுடைய** காயங்களில் **எண்ணெய் வார்க்கப்பட்டது** (லூக்10:34). இதைப்போலவே ஏசாயா 1:6 ல் **காயங்கள் எண்ணெயினால்** ஆற்றப்படாமலும் இருக்கிறது என்னும் குறிப்பும், அக்காலத்தில் எண்ணெயே காயங்களுக்கான மருந்தாக இருந்துள்ளதை அறியத்தருகின்றது, மேலும் ஏரோது என்னும் அரசன் வியாதியாய் இருந்தபோது அவனுக்கு சுகம் கிடைப்பதற்காக அவனை **எண்ணெய்யில் குளிப்பாட்டியதாக** யூத வரலாற்று ஆசிரியர் ஜோஸிபஸ் குறிப்பிட்டுள்ளார்,

அக்கால மருத்துவர்கள் **பல்வலியிலிருந்து, திமிர்வாதம்** வரை சகல வியாதிகளுக்கும் **எண்ணெய்யை சிறந்த மருந்தாக** கருதினார்கள், எனவே எண்ணெய் பூசி ஜெபிக்கும்படியான கட்டளை மருந்துடனான ஜெபமாகவே உள்ளது. சில ஆராய்ச்சியாளர்கள் எண்ணெய் பூசுவதை **எண்ணெயினால் அபிஷேகிக்கப்படுவதாக** கருதுகின்றனர், ஆனால் அபிஷேகிக்கப்படுவதற்கு வழக்கமாக உபயோகிக்கப்படும் **கிரியோ** என்னும் **கிரேக்க சொல்லை** யாக்கோபு இவ்வசனத்தில் உபயோகிக்கவில்லை, அவர் **அலைஃபோ** என்று குறிப்பிட்டுள்ள **கிரேக்கசொல்** தமிழ் வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள விதமாக **பூசுதல்** என்னும் அர்த்தம் உடையது, எனவே **எண்ணெயை மருந்தாக பூசுவதைபற்றியே யாக்கோபு** இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளாளர். இதனால் கிறிஸ்தவர்களாகிய **நாம் மருந்துகள்** உபயோகிப்பது தேவனால் அங்கீகரிப்பட்டுள்ள செயல்முறைாகவே உள்ளது,

எண்ணெய் பூசி ஜெபிக்கும்படியான கட்டளையை தொடர்ந்து விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், யாக், 5:15 என்று குறிப்பிடப்படுள்ளதினால் மருந்தாக பூசப்படும் எண்ணெய் அல்ல, **விசுவாசமுள்ள ஜெபமே** வியாதியஸ்தனை குணப்படுத்தும் என்றும் இதனால் எண்ணெய் மருத்துவ உபயோகத்தைப்பற்றி இவ்வசனம் எதுவும் கூறவில்லை என்றும் சிலர் கருதுகின்றனர். இவ்வசனத்தின் படி விசுவாசமுள்ள ஜெபமே வியாதியஸ்தருக்கு சுகத்தை கொடுக்கிறது என்பது உண்மை என்றாலும் இந்த ஜெபம் எண்ணெய் பூசு ஏறெடுக்கப்படும் ஜெபமாகவே உள்ளது, ஏனெனில் நாம் ஏற்கனவே பார்த்தபடி எண்ணெய்

அக்காலத்தில் மருந்தாக உபயோகிக்கப்பட்டதினால் இது மருந்தையும் உபயோகித்து விசுவாசத்துடன் ஏறெடுக்கப்படும் ஜெபமாகவே உள்ளது. உண்மையில் நமக்கு சுகம்கொடுப்பது தேவனே, நாம் மருந்துகளை உபயோகித்தாலும் தேவனாலேயே நமக்கு சுகத்தை கொடுக்கமுடியும் என்னும் விசுவாசம் நமக்கு இராவிட்டால் நம்முடைய மருந்தும் ஜெபமும் பலன் அளிக்காது, ஏனெனில் நாம் உபயோகிக்கும் மருந்துகள் மூலம் நமக்கு சுகத்தை கொடுப்பது தேவனே, இதனால்தான் **மருந்துகள் தயாரிக்கக்கூடிய** பலதரப்பட்ட **கனி பொருட்களையும் தாவரங்களையும்** கர்த்தர் **சிருஷ்டித்துள்ளார்.**

வேதாகம காலத்தில் **திராட்சை ரசமும்** மருந்தாக உபயோகிக்கப்பட்டது. இதனால் தான் நல்ல சமாரியன் உவமையில் எண்ணெய் உடன் சேர்த்து **திராட்சை ரசமும் கள்ளர்களினால்** தாக்கப்பட்டவனுடைய காயங்களுக்கு வார்க்கப்பட்டது. (லூக். 10:34). ஏனெனில் **திராட்சை ரசத்துக்கு கிருமிகளை அளிக்கக்கூடிய ஆற்றல்** இருப்பதனால் காயங்கள் ஏற்படும் போது அது புண்ணாக மாறாமல் இருப்பதற்காக **காயத்தை கழுவுவதற்கு** அக்காலத்தில் திராட்சை ரசம் உபயோகிக்கப்பட்டது. மேலும் அக்காலத்தில் **தண்ணீரை சுத்திகரிப்பதற்கும்** திராட்சை ரசமே உபயோகிக்கப்பட்டது.

இதனால் தான் **சுத்தமற்ற தண்ணீரை** குடித்து அடிக்கடி வியாதி ஏற்பட்ட **தீமோதேயுக்கு** தண்ணீர் மாத்தரம் குடிக்காமல் அதனோடு **கொஞ்சம் திராட்சை ரசமும் சேர்த்துக் கொள்ளும்**படி பவுல் அறிவுறுத்தியுள்ளார் (1தீமோ 5:23). சில கிறிஸ்தவர்கள் மதுபானத்திற்கு வேதாகமம் அனுமதிக்கொடுத்துள்ளது என்றும் தங்கள் தவறாக கருத்துக்களுக்கு ஆதாரமாகத் தீமோத்தேயுவுக்குப் பவுல் கூறிய அறுவுறுத்தலை உபயோகிக்கின்ற போதிலும் இது **மதுபானத்திற்கான அனுமதியல்ல.** ஏனெனில் திராட்சை ரசத்தை முழுமையாக தவிர்த்து வந்த தீமோதேயு வழக்கமாக தண்ணீர் அருந்தும் பொழுது அதற்கு சேர்க்கப்படும் சிறிது அளவு திராட்சை ரசத்தை தவிர்த்து வந்ததினால் அடிக்கடி வியாதிப்பட்டான். இதனால் தான் நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடிக்காமல் உன் வயிற்றிற்காகவும் உனக்கு அடிக்கடி நேரிடுகின்ற பலவீனங்களுக்காகவும் கொஞ்சம் திராட்சை ரசமும் கூட்டிக்கொள் என்று பவுல் அறிவுறுத்தியுள்ளார் (1 தீமோ 5:3).

தற்காலத்தில் **தண்ணீரை** சுத்திக்கரிப்பதற்கு **குளோரின்** உபயோகிக்கப்படுவது போல அக்காலத்தில் **திராட்சை ரசம்** உபயோகிக்கப்பட்டது. எனவே திராட்சை ரசத்தை தண்ணீரை சுத்தகரிக்கப்படுவதாக உபயோகிக்கும்படியே பவுல் தீமோதேயுவுக்கு அறுவுறுத்தியதினால் தற்காலத்திலும் சரீர பிரகாரமான பலவீனங்களுக்கும் வியாதிகளுக்கும் நாம் மருந்துகளை உபயோகிப்பதில் எவ்வித தவறுமில்லை. இதனால் **தான் ஜெபத்தின் மூலம் தீமோதேயுவின் வியாதியை சுகப்படுத்தாம**ல் மருந்தை உபயோகிக்கும்படி பவுல் தீமோதேயுவுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் மருந்துகள் எடுப்பதற்கும் மருத்துவரின் உதவியை நாடுவதற்கும் வேதாகமம் அனுமதி கொடுத்துள்ளபோதிலும் இதை முழுமையாக ஏற்றுக்கொள்ளாதவர்கள் பழைய ஏற்பாட்டு காலத்தில் **ஆசா** என்னும் அரசன் **வைத்தியரை தேடியது தவறான செயலாக** குறிப்பிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டுவது வழக்கம். ஏனெனில் 2நாளாகமம் 16:12ல் அரசாண்ட முப்பத்தொன்பதாம் வருஷத்திலே **தன் கால்களில் வியாதி கண்டு** அவன் **நோவு மிகவும் உக்கிரமாய்** இருந்தது. அவன் தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல **பரிகாரிகளையே தேடினான்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் **ஆசா** மருத்துவரின் உதவியை நாடியதை அல்ல **அவன் தேவனை தேடாதவனாக இருந்துள்ளதையே** நாளாகம ஆசிரியர் இவ்வசனத்தில் குற்றமாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால்தான் அவன் தன் வியாதியிலும் கர்த்தரை தேடாமல் **பரிகாரிகளையே** தேடினான் என்று நாளாகம ஆசிரியர் கூறுகிறார். அதாவது அவன் வைத்தியரை மாத்திரம் தேடியதே நாளாகமப் புத்தக ஆசிரியரால் தவறான செயலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஆசா தன் **வியாதியிலும்** என்னும் சொல் அவன் வியாதியாயிருந்த போது மாத்திரமல்ல **அதற்கு முன்பும் தேவனைத் தேடாதவனாக** இருந்ததுள்ளதை அறியத்தருகின்றது. உண்மையில் ஆசா தன்னுடைய ஆட்சியின் ஆரம்பத்தில் தேவனை தேடுகிறவனாகவே இருந்தான் (2 நாளா 14:2-5). இதனால்தான் எத்தியோப்பியருடன் ஏற்பட்ட யுத்தத்தின்போது அவன் **தேவ உதவியை நாடி வெற்றிபெற்றா**ன் (2 நாளா 14:10-12). அதன்பின்பும் முப்பதைந்து வருஷங்கள் அவன் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து நடந்தான் (2 நாளா 15:8-9). ஆனால் 36ஆம் வருஷத்தில் இஸ்ரேவேலின் அரசன் **பாஷா யூதேயாவைத் தாக்க** வந்தபோது **ஆசா தேவனைத் தேடாமல்** சீரியா அரசனின் உதவியை நாடினான் (2 நாளா 16:1-4).

**ஆசாவின்** இச்செயலைத் தேவனுடைய **தீர்க்கதரிசி கண்டித்தபோது** ஆசா அவனுடைய வார்த்தைகளுக்கு செவிக்கொடுக்காமல் அவனை சிறையிலடைத்தான் (2 நாளா 16:7-10) . இதனால் **ஆசாவின்** இத்தகைய செயல்களுக்கான தேவ தண்டனையின் எச்சரிப்பாகவே அவனுக்கு வியாதி ஏற்பட்டது என்னும் அர்த்த்திலேயே நாளாகம ஆசிரியர் அவனுடைய வியாதியைப்பற்றி குறிப்பிட்டுள்ளார். இதனால் தான் **அவன் தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல பரிகாரிகளையே தேடினான்** என்று நாளாகம ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் நாளாகமப் புத்தகம் எழுதப்பட்ட காலத்தில் யூதர்கள் மருந்துகள் உபயோகிப்பதையும் மருத்துவரின் உதவியை நாடுவதையும் தவறான செயல்களாகக் கருதவில்லை. ஏனெனில் **மருத்துவர்களும் மருந்துகளும் தேவனுடைய ஈவாகவே**

மனிதருக்கு அருளப்பட்டுள்ளன என்பதே **அக்கால யூதர்களின் நம்பிக்கையாக இருந்தது.** புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களுக்கு சுகம் கொடுக்கும் வைத்தியராகக் கருதினாலும் மருத்துவர்களையும் கனப்படுத்துகிறவர்களாகவே இருந்தனர்.

இதனால்தான் **லூக்காவைப் பவுல் பிரியமான வைத்தியன்** என்று குறிப்பிட்டுள்ளார். (கொலோ 4:14) ஏனெனில் பிணியாளிக்கு வைத்தியர் தேவை (மத். 9:12) என்று இயேசு கிறிஸ்துவே தெரிவித்துள்ளார். மேலும் மனிதனுக்கு சரீர சுகத்தைக் கொடுப்பது தேவனே என்பதை உருதியாக நம்பிய ஆதி திருச்சபையினர் மருந்துகள் உபயோகிப்பதற்கு எவ்வித தடையையும் விதித்திருக்கவில்லை. இதனால் தான் ரோம அரசாங்கத்தின் மூலமான உபத்திரவங்கள் கி.பி 4ம் நூற்றாண்டில் நிறுத்தப்பட்டவுடன் **வைத்திய சாலைகளை ஆரம்பிக்கும் பணிகளில் கிறிஸ்தவ சபை ஈடுப்பட்டது.** எனவே **தேவன் சுகம் கொடுப்பார் என்னும் நம்பிக்கையுடன் மருந்துகள் எடுப்பதில் எவ்வித தவறும் இல்லை.** ஏனெனில் தேவன் மருந்துகள் மூலமும் சுகம் கொடுக்கிறவராக இருப்பதினால் அவரை விசுவாசித்தவர்கள் **மருந்துகளை** உபயோகிக்கும்போது அவர் மருந்துகள் மூலம் நமக்கு சுகத்தைக் கொடுக்கிறவராக இருக்கின்றார். எனவே **மருந்துகள் எடுப்பது அவிசுவாசத்தின் அடையாளம் அல்ல.**

தேவன் மருந்துகள் மூலமும் நமக்கு சுகம் கொடுப்பவராக இருப்பதினால் நோய்கள் **வராமல் இருப்பதற்குத் தடுப்பூசிகள்** போடுவதும் எவ்விதத்திலும் **ஒரு தவறான செயல் அல்ல.** ஏனெனில் **நோய்கள் பரவுதலைத் தடைசெய்யும்** விதத்தில் பல கட்டளைகளையும் தேவன் வேதாகமத்தில் கொடுத்துள்ளார்.

உண்மையில் பழைய ஏற்பாட்டிலுள்ள உணவுச் சட்டமும் (லேவி 11, உபா 14), லேவியராகமத்திலுள்ள **சுத்திகரிப்பு** முறைகளும் **மருத்துவத்துறை** அதிகமாக வளர்ச்சியடையாத காலத்தில் நோய்கள் பரவுதலைத் தடுப்பதற்காகத் **தேவன் கொடுத்த அறிவுறுத்தல்களாகவே** உள்ளன (லேவி 11-16). இதனால் தான் பழைய ஏற்பாட்டில் புசிக்கக் கூடாதவை என்று தேவனால் அறிவிக்கப்பட்டுள்ள **மிருகங்கள் பறவைகள் மீன் இனங்களின் மாம்சத்தில் மனிதருக்கு நோய்களை ஏற்படுத்தக்கூடிய கிருமிகள் அதிகமாக இருப்பதைத் தற்காலத்தில் மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.** ஏனெனில் எகிப்தியருக்கு வந்த எந்த வொரு வியாதியும் இஸ்ரவேல் மக்களுக்கு வராது என்று வாக்களித்த தேவன் (யாத் 15:26), அவர்கள் ஆரோக்கியமாக இருப்பதற்காக அதிக நோய்க் கிருமிகள் உள்ள மிருகங்கள் பறவைகள் மீனினங்களைப் புசிப்பதற்குத் தடை விதித்திருந்தார்.

எனினும் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இத்தடை நீக்கப்பட்டதினால் (மாற்கு 7:19, 1 தீமோ 4:3-4, அப் 10:9-17), பழைய ஏற்பாட்டு உணவுச் சட்டம் நோய் தடுப்புக்கானதல்ல என்று சிலர்

கருதுகின்றனர். ஆனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் மருத்துவத் துறையின் வளர்ச்சியும் சமையல் முறைகளின் முன்னேற்றமும் மிருகங்கள் பறவைகளின் இறைச்சியிலுள்ள நோய்க் குருமிகளை அதிகளவல் அழிக்கக்கூடிதாயிருந்தது.

மேலும் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யூதர்கள் உணவுச் சட்டத்தை தங்களுடைய இனத்தின் மேன்மையைக் குறிக்கும் அடையாளமாக்கி இச்சட்டத்தைக் கைக்கொள்ளாத புற ஜாதி மக்களை அசுத்தமானவர்களாகவும் தீண்டத்தகாதவர்களாகவும் கருதியதினால் புதிய ஏற்பாட்டில் உணவுச்சட்டம் முழுமையாக நீக்கப்பட்டது உண்மை என்றாலும் ஆரம்பத்தில் தேவன் இச்சட்டத்தைக் கொடுக்கும்போது மக்களின் சரீர ஆரோக்கியத்தைக் கருத்திற் கொண்டவராகவே எவைகளைப் புசிக்கலாம் எவைகளைப் புசிக்கக்கூடாது என்பதை அறிவித்திருந்தார்.

பழைய ஏற்பாட்டின் உணவுச் சட்டம் மாத்திரமல்ல உள்ள சுத்திகரிப்பு சமபந்தமான கட்டளைகள் அனைத்தும் மனிதனுடைய சரீர ஆரோக்கியத்தை கருத்திற்கொண்ட கொடுக்கப்பட்ட சுகாதார கட்டளைகளாகவே உள்ளன. இதனால்தான் பிள்ளைப்பேற்றின் பின்பான தாயின் சுத்தகரிப்பு முறைகளும் (லேவி 12) சரீரத்தில் ஏற்படும் வியாதிகளின் போது, குறிப்பாக **குஷ்டரோகம்** போன்ற **தோல் வியாதிகள்** ஏற்பட்டால் மனிதர் நடந்துகொள்ள வேண்டிய முறைகளும் (லேவி 13:1-46) **ஆடைகளிலும்** வீடுகளிலும் **பூஞ்சனங்கள்** ஏற்படும்போது செய்யவேண்டிவைகளைப்பற்றிய விளக்கங்களும் (லேவி 13:47-59,14:33-53) மனித சரீரத்திலிருந்து வெளியேறுபவைகளைக் **கழுவிச் சுத்தகரிக்கும் முறைகளும் (லேவி 15) லேவியராகமப் புத்தகத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன (லேவி 12-15).**

தற்காலத்தில் மருத்துவத்துறை வளர்ச்சியடைந்திருப்பதினால் இத்தகைய சுத்திகரிப்புகளை நாம் வித்தியாசமான முறைகளில் செய்கின்றோம். எனவே வியாதி வருவதைத் தடுக்கும் வழிமுறைகளைக் கையாள்வது தேவன் நமக்குக் கற்றுக்கொடுத்துள்ள சுகாதாரப் பாடங்களாய் இருப்பதினால், தற்காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் **நோய்கள் தொற்றுவதைத் தடுப்பதற்காகத் தடுப்பூசிகள் போடுவது எவ்விதத்திலும் தவறான ஒரு செயல் அல்ல.**

உண்மையில் நமக்கு சுகம் கொடுப்பது தேவனே, நாம் மருந்துகளை உபயோகித்தாலும் **தேவனாலேயே நமக்கு சுகத்தைக் கொடுக்கமுடியும் என்னும் விசுவாசம் நமக்கிராவிட்டால்** நம்முடைய **மருந்தும் ஜெபமும் பலனளிக்காது.**

சில நேரங்களில் நேரடியாக நமக்கு சுகத்தைக் கோடுக்கும் தேவன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மருந்துகள் மூலமாகவே நமக்கு சுகத்தைக் கொடுக்கின்றனர். வியாதியஸ்தரைப் படிப்படியாக சுகப்படுத்துபவராகவும் தேவன் இருக்கின்றனர். ●

## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA (S.B. A/C)**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM (S.B. A/C)** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

**FEBRUARY-2022**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.